# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
# SECOND YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007
## Held in May 2007

## ECS 2.12 – ECONOMIC HISTORY OF SRI LANKA

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. "ஆங்கிலேயர்களின் வருகை இலங்கையின் பொருளாதாரத்தில் இரட்டைத் தன்மையைத் தோற்றுவித்தது." இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையை நியாயப்படுத்துக.

02. இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில், கோப்பிப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் எழுச்சிக்கும், அதன் வீழ்ச்சிக்கும் பங்களிப்புச் செய்த காரணிகளை விளக்குக.

03. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்க.

04. கோல்புறூக் - கெமரன் சீர்திருத்தங்கள் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்களைப் பரிசீலனை செய்க.

05. தென் இந்தியாவிலிருந்து இலங்கைப் பெருந்தோட்டங்களுக்குத் தொழிலாளர்கள் தருவிக்கப்பட்டமை இலங்கையின் சமூக, பொருளாதாரக் கூறுகளில் ஏற்படுத்திய பாதிப்புக்களை ஆராய்க.

06. இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றில் அரசியற் கட்சிகள் வகித்துள்ள பங்கினை சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தை மையமாகக் கொண்டு விளக்குக.

07. 1948 – 1977 வரையிலான இலங்கையின் பொருளாதார வரலாறு சுதந்திரத்திற்கு முற்பட்ட அதன் பொருளாதார வரலாற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக.

08. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(அ) ஏ.ஈ. குணதிலக

(ஆ) இராஜகாரிய முறையின் ஒழிப்பு

(இ) கல்லோயா நீர்ப்பாசனத் திட்டம்

(ஈ) இறக்குமதிப் பிரதியீடுகள்

***